අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# முயற்சியாண்மைக் கல்வி

## வினாத்தாள் I,II



தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

# கல்வி அமைச்சு

| 63 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

| முயற்சியாண்மைக் கல்வி - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

## முயற்சியாண்மைக் கல்வி I

**கவனிக்க.**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

**1.** எண்ணமொன்றினைச் செயற்பாடாக மாற்றுவதற்குத் தனியாளொருவருக்குள்ள திறன்.

1. தலைமைத்துவம்
2. முகாமைத்துவம்
3. முயற்சியாண்மை
4. உரிமையாண்மை

**2.** உற்பத்திக் காரணிகளுள் மற்றைய உற்பத்திக் காரணிகளை ஒன்றிணைத்து செயற்படுத்துவது

1. நிலம்
2. உழைப்பு
3. மூலதனம்
4. முயற்சி

**3.** பின்வருவனவற்றுள் விருப்பங்களை மட்டும் கொண்ட விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

1. இடியப்பம், காப்பு, மாடிவீடு
2. உணவு, காலணி, உடை
3. உணவு, உடை, குடிசைவீடு
4. சோறு, ஆடை அணிகள், உறையுள்

**4.** சுயாத் என்பவர் சோலர் (Solar) மூலம் இயங்கும் மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடித்தார். இது புத்துருவாக்கம் இடம்பெறும் முறைகளில் எதனுள் உள்ளடங்கும்

1. புதிய கண்டுபிடிப்பு
2. நீடிப்பு
3. பின்பற்றுதல்
4. கூட்டு

**5.** இலங்கையில் பெண்கள் கடற்றொழிலில் ஈடுபடுகின்றது மிகவும் அரிதாகவே காணப்படுகின்து. இதில் செல்வாக்குச் செலுத்தும் ஆக்கத்திறனுக்குத் தடையாக அமையும் காரணி எது?

1. ஒரு பிரச்சனைக்கு ஒரு தீர்வு மாத்திரமே உள்ளது என எண்ணுதல்
2. உடனடிப் பெறுபேற்றினை எதிர்பார்த்தல்
3. நம்பிக்கைகள், மனப்பாங்குகள் தொடர்பில் உறுதியான நம்பிக்கை வைத்தல்
4. நடைமுறைப்படுத்துவதற்குத் தடைகள் காணப்படலாம் என எண்ணுதல்

**6.** பின்வருவன முயற்சியாண்மை மூலம் தேசிய பொருளாதாரத்திற்குக் கிடைக்கும் நன்மைகளாகும்.

A - பிரதேச அபிவிருத்திகள் ஏற்படுகின்றமை
B - தொழில்வாய்ப்புக்கள் உருவாகின்றமை
C - வெளிநாட்டு செலாவணியை உழைக்க முடிதல்
D - நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரித்தல்

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடிக்கு மேற்படி நன்மைகளில் எதன் பங்களிப்புக் குறைந்தமை காரணமாகும்.

1. A மட்டும்
2. C மட்டும்
3. A யும் B யும்
4. C யும் D யும்

7. எமது நாட்டில் ஒப்பீட்டுரீதியில் அதிகளவில் கணப்படும் வணிகம்.

1. பாரிய வணிகம்
2. நடுத்தரளவு வணிகம்
3. சிற்றளவு வணிகம்
4. ஏற்றுமதி வணிகம்

8. முயற்சியாளர் தனது பாவனையிலிருந்த உபகரணங்களை வணிகத்தின் தேவைக்கு ஈடுபடுத்தினார். இது முயற்சியாளரின் எவ்வகிபங்கினுள் அடங்கும்.

1. உரிமையாளரின் வகிபங்கு
2. முகாமையாளரின் வகிபங்கு
3. தலைவரின் வகிபங்கு
4. ஊழியரின் வகிபங்கு

9. பின்வருவனவற்றில் எண்ணக்கரு ரீதியான திறனில் உள்ளடங்குவது.

1. இயந்திரங்களைப் பழுதுபார்த்தல்
2. ஊழியர்களை ஊக்கப்படுத்தல்
3. தகவல்களைப் பரிமாறுதல்
4. புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல்

10. வணிகமொன்றின் பலம் மற்றும் பலவீனங்களை ஆய்வுசெய்யும் சூழலாக பின்வருவனவற்றில் எதனை இனங்காண முடியும்.

1. அகச் சூழல்
2. புறச் சூழல்
3. அண்மிய சூழல்
4. பொருளாதாரச் சூழல்

11. சேதனப் பசளைகளைத் தயாரிக்கும் வணிகமொன்றிற்கான வாய்ப்பாகக் கருதக்கூடியது

1. அறிவும் பயிற்சியும் கொண்ட ஊழியர்கள் காணப்படுதல்
2. மூலப்பொருட்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகக் காணப்படுதல்
3. சேதனப் பசளைப் பாவனைக்கு விவசாயிகள் பழக்கப்படாமை
4. இரசாயனப் பசளைகளை இறக்குமதி செய்வதற்கான கட்டுப்பாடுகள்

12. இரண்டாம் நிலை வணிகத்துள் உள்ளடங்கும் பொருளாதாரச் செயற்பாடு.

1. பாலம் அமைத்தல்
2. பழச் செய்கையில் ஈடுபடுதல்
3. இரத்தினக்கல் அகழ்தல்
4. மொத்த சில்லறை வியாபாரம்

13. நீரிழிவு நோயாளர்களுக்கான விசேட பால்மா வகைகளை உற்பத்தி செய்தல்

1. பாவனையிலுள்ள பொருளை நடைமுறையிலுள்ள சந்தையில் முன்வைத்தல் ஆகும்
2. பாவனையிலுள்ள பொருளை புதிய சந்தையில் முன்வைத்தல் ஆகும்
3. புதிய பொருளை நடைமுறையிலுள்ள சந்தையில் முன்வைத்தல் ஆகும்
4. புதிய பொருளை புதிய சந்தையில் முன்வைத்தல் ஆகும்

14. புதிய வணிகரொருவர் இலகுவாக மூலதனத்தினைப் பெறக்கூடிய வழிமுறையாக அமைவது.

1. வங்கிக்கடன் பெறுதல்
2. சொந்த சேமிப்பபைப் பயன்படுத்தல்
3. உறவினர்களிடம் கடன் பெறுதல்
4. வாடிக்கையாளரிடம் முற்பனம் பெறுதல்

15. நிறுவனம் ஒன்றுக்குப் பல்திறனைக் கொண்ட முகாமையானர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

1. ஒரு பலம் ஆகும்
2. ஒரு பலவீனம் ஆகும்
3. ஒரு வாய்ப்பு ஆகும்
4. ஒரு அச்சுறுத்தல் ஆகும்

16. புதிய கண்டுபிடிப்புக்களுக்கு அரசால் வழங்கப்படும் ஆக்கவுரிமை பத்திரத்தின் ஆயுட்காலம்.

1. 5 ஆண்டுகள்
2. 10 ஆண்டுகள்
3. 15 ஆண்டுகள்
4. 20 ஆண்டுகள்

17. ஆபத்துக்களைப் பொறுப்பேற்கின்ற நபர்களுக்கு போதுமான பிரதிபலனை பெற்றுக் கொடுக்கும் ஆற்றலுள்ள கவர்ச்சிகரமான முதலீட்டு எண்ணம்

1. வணிக எண்ணம் ஆகும்
2. வணிக வாய்ப்பு ஆகும்
3. வணிகம் ஆகும்
4. உற்பத்தி ஆகும்

18. வணிகத் திட்டமொன்றை பரிசீலிக்கும் ஒருவர் அதன் முக்கியமான விடயங்களை சுருக்கமாகப் பெற்றுக் கொள்வது

1. நிறைவேற்றுச் சுருக்கத்தின் மூலமாகும்
2. சந்தைப்படுத்தல் திட்டத்தின் மூலமாகும்
3. உற்பத்தித் திட்டத்தின் மூலமாகும்
4. நிர்வாகத் திட்டத்தின் மூலமாகும்

19. முயற்சியாளர் ஒருவர் சந்தைப்படுத்தல் திட்டத்தில் பின்வரும் விடயங்களை அலசி ஆராய்ந்தார்

A – தனது பொருள் அல்லது சேவைக்குள்ள கேள்வி

B – இலக்கு வாடிக்கையாளர்கள்

C – போட்டியாளர்கள்

இவற்றில் சந்தை ஆய்வின்போது கருத்தில் கொள்ள வேண்டிய விடையங்களைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.

1. AB
2. AC
3. BC
4. A,B,C

20. உந்துருளி பழுதுபார்த்தல் சேவை வணிகத்தின் இலக்கு வாடிக்கையாளர்.

1. உந்துருளி இறக்குமதியாளர்கள்
2. உந்துருளி விநியோகஸ்தர்கள்
3. உந்துருளிப் பாவனையாளர்கள்
4. உந்துருளி உதிரிப்பாக விற்பனையாளர்கள்

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 21, 22 மற்றும் 23 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A – முகாமையாளர் சம்பளம்

B – விளம்பரம்

C – தொழிற்சாலை பெறுமானத் தேய்வு

D – விற்பனை நிலைய ஊழியர் சம்பளம்

E– மூலப்பொருள் கொள்வனவுச் செலவு

F – காப்புறுதிக் கட்டணம்

21. சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடங்கும் செலவினங்களைக் கொண்ட தொகுதி யாது?

1. A,B
2. B,D
3. D,E
4. E,F

22. உற்பத்தித் திட்டத்தில் உள்ளடங்கும் செலவினங்களைக் கொண்ட தொகுதி யாது?

1. A,E
2. B,C
3. D,F
4. C,E

23. நிர்வாகத் திட்டத்தில் உள்ளடங்கும் செலவினங்களைக் கொண்ட தொகுதி யாது?

1. A,C
2. A,F
3. B,F
4. D,E

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 24 ஆம், 25 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

பரிதா கேக் உற்பத்தி வணிகம் தொடர்பான ஒரு நாளுக்கான தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| மூலப்பொருள் கொள்வனவு | ரூபா 50,000 |
| உற்பத்தி ஊழியர் கூலி | ரூபா 5,000 |
| உற்பத்தி உபகரணப் பெறுமானத் தேய்வு | ரூபா 2,000 |
| மேற்பார்வையாளர் கூலி | ரூபா 2,500 |
| மின்சாரம் | ரூபா 500 |

குறித்த நாளில் உற்பத்தி செய்த கேக் துண்டுகளின் எண்ணிக்கை 2000 ஆகும்

24. மொத்த உற்பத்திக் கிரயம் எவ்வளவு.

1. ரூபா 50,000
2. ரூபா 55,000
3. ரூபா 57,000
4. ரூபா 60,000

25. ஒருதுண்டு கேக்கிற்கான உற்பத்திக் கிரயம் எவ்வளவு.

1. ரூபா 30
2. ரூபா 28
3. ரூபா 26
4. ரூபா 25

26. பின்வரும் விடயங்களில் நிர்வாகத் திட்டத்தில் உள்ளடங்குவது எது?

1. தொழிற்சாலைக் கட்டடம்
2. விநியோக வான்
3. காரியாலய உபகரணம்
4. விற்பனை நிலையக் கட்டடம்

27. நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்படும் போட்டியாளர்களது விநியோக முறைகளை அறிந்து கொள்வதற்கான செலவு எதனுள் உள்ளடங்கும்.

1. இடத்தினை தயார்ப்படுத்துவதற்கான செலவு
2. சந்தை ஆய்விற்கான செலவு
3. மூலப்பொருட்களை தேடி அறிவதற்கான செலவு
4. பதிவு செய்வதற்கான செலவு

28. தனியாள் உடமை வணிகத்தின் பெயரை 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வணிகப் பெயர்ப்பதிவுக் கட்டளைச் சட்டத்திற்கமைவாக பதிவு செய்யவேண்டிய நிறுவனம்

1. மாவட்டச் செயலகம்
2. பிரதேச சபை
3. பிரதேச செயலகம்
4. கம்பனிப் பதிவாளர் திணைக்களம்

29. தனியுடமை வணிகமொன்றின் அனுகூலமாக அமைவது.

1. வணிகத்தின் நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்
2. சட்ட ஆளுமை காணப்படுதல்
3. வணிகமானது நீண்டகாலம் நிலைத்திருத்தல்
4. வணிக இரகசியத்தன்மைகள் பாதுகாக்கப்படல்

30. தனியாள் உடமை, கூட்டிணைக்கப்பட்ட கம்பணி ஆகிய வணிக அமைப்புக்களின் பொதுவான பண்பாக அமைவது.

1. தனியொருவரால் ஆரம்பிக்க முடிதல்
2. நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்
3. இயக்குனர் சபை மூலம் நிர்வகிக்கப்படுதல்
4. சட்ட ஆளுமை காணப்படாமை

31. பங்குடமை வணிகமொன்றின் பங்காளர் எண்ணிக்கை

1. 1-20
2. 2-20
3. 1-50
4. 2-50

32. வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்தமைக்காக கம்பனிப் பதிவாளரால் வழங்கப்படும் ஆவணம்.

1. கம்பனி அகவிதிப் பத்திரம்
2. வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழ்
3. கூட்டிணைப்புச் சான்றிதழ்
4. வணிக அனுமதிப் பத்திரம்

33. கொழும்பிலுள்ள சிங்கர் கம்பனியானது யாழ்ப்பாணத்திலுள்ள சண் தளபாடக் கம்பனிக்கு தனது உற்பத்திகளை அதே பெயரில் விற்பனை செய்ய அங்கீகார ஒப்பந்தமொன்றைச் செய்து உற்பத்திப் பொருட்களை ப்றொன்டோ முகவர் நிறுவனத்தின் ஊடாக அனுப்பி வைத்தது. இங்கு அங்கீகாரம் வழங்குபவர், அங்கீகாரம் பெறுபவர் முறையே

1. ப்றொன்டோ முகவர் நிறுவனம், சண் தளபாடக் கம்பனி
2. சண் தளபாடக் கம்பனி, சிங்கர் கம்பனி
3. சிங்கர் கம்பனி, ப்றொன்டோ முகவர் நிறுவனம்
4. சிங்கர் கம்பனி, சண் தளபாடக் கம்பனி

34. அங்கீகார வணிகத்தில் அங்கீகாரம் வழங்குபவருக்கு அங்கீகாரம் பெறுபவரால் தணக்கு வழங்கப்பட்ட அனுமதியின் அடிப்படையில் செலுத்தப்படும் கட்டணம்

1. தனியுரிமைக் கட்டணமாகும்
2. தரகுக் கட்டணமாகும்
3. இலாபப் பங்காகும்
4. தண்டக் கட்டணமாகும்

35. முயற்சியாளருக்கே உரித்தான விசேடமான குண நடத்தைகள், மனப்பாங்குகள், நம்பிக்கைகள், எண்ணங்கள், நடத்தைக் கோலங்கள், பழக்க வழக்கங்கள் போன்ற விடயங்களின் தொகுதி.

1. முயற்சியாண்மை ஆகும்
2. முயற்சியாண்மை கலாசாரமாகும்
3. முயற்சியாண்மைப் பண்புகளாகும்
4. முயற்சியாளரின் இயல்புளயாகும்

36. பாடசாலை மாணவர்களிடையே அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் முயற்சியாளர்

1. வணிக முயற்சியாளர் ஆவார்
2. உள்ளக முயற்சியாளர் ஆவார்
3. சமூக முயற்சியாளர் ஆவார்
4. ஆக்கத்திறனுள்ள முயற்சியாளர் ஆவார்

37. பெண்களிடம் காணப்படும் இரக்கப் பண்பு, மென்மைத் தன்மை போன்ற பண்புகளைக் கொண்டமைந்த வணிக வாய்ப்பு எது?

1. ஆடை உற்பத்தி
2. அழகுக்கலை நிலையம்
3. சமைத்த உணவு விற்பனை நிலையம்
4. குழந்தைப் பராமரிப்பு நிலையம்

38. வணிகமானது தமது ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியினை உரிய முறையில் வழங்கி வருகின்றமையானது எந்த சமூகப் பொறுப்பினுள் உள்ளடங்கும்.

1. பொருளாதாரப் பொறுப்பு
2. சட்டப் பொறுப்பு
3. பண்பாட்டுப் பொறுப்பு
4. பொதுநல விருப்புடைய பொறுப்பு

39. இலங்கையில் முயற்சியாளர்களுக்குக் கிடைக்கும் நிதிசாரா ஊக்குவிப்பாக அமைவது.

1. முயற்சியாளருக்கான இலவசப் பயிற்சி வழங்கல்
2. சலுகை வட்டிவீதத்தில் கடன் வழங்குதல்
3. கடன் மீளச்செலுத்தும் கால எல்லையை அதிகரித்தல்
4. நிதி அன்பளிப்புக்களை வழங்குதல்

40. வணிகமொன்றின் செயற்பாடுகளில் அரசு அக்கறை செலுத்துவதற்கு மிகப்பிரதான காரணமாக அமைவது

1. வரிப்பணத்தினை சரியான முறையில் பெற்றுக்கொள்வதற்கு
2. நியாயமான விலையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்
3. நியாயமான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளுதல்
4. வழங்கிய கடனை குறித்தகாலத்தில் மீளப் பெற்றுக்கொள்ளுதல்

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 63 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| முயற்சியாண்மைக் கல்வி - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

## முயற்சியாண்மைக் கல்வி - II

* **முதலாம்** வினாவையும் வேறு எவையேனும் **நான்கு** வினாக்களினையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களிற்கும் மாத்திரம் விடை எழுதுக.

* **முதலாம்** வினாவிற்கு 20 புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களிற்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

1. பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட கார்திகேயன் தனியார் பல்கலைக்கழகமொன்றில் பகுதி நேரமாக இரசாயனவியல் துறையில் பட்டக் கற்கையொன்றைத் தொடர்கின்றார். புத்தாக்கத்தினை பெரிதும் விரும்பும் அவர் தனது பாடசாலை காலத்தில் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட புத்தாக்க போட்டியில் உயிர் வாயு (BioGas) தயாரித்தல் தொடர்பில் பரிசிலினைப் பெற்றுள்ளார். தற்போது நாட்டில் நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடியின் விளைவாக சமயல் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் அதன் அதிகூடிய விலையேற்றம் என்பவற்றை சாதகமாக எடுத்து இதற்கு பிரதியீடாக சூழலுக்குப் பாதிப்பின்றி கழிவுகளைப் பயன்படுத்தி உயிர் வாயு (BioGas) தயாரித்து கொள்கலன்களில் அடைத்து விற்பனை செய்யத் தீர்மானித்தார். இதற்காக தந்தையின் மாட்டுப்பண்ணையிலிருந்து கிடைக்கின்ற கழிவுகளை உள்ளீடாக பயன்படுத்த எண்ணினார்.

வெளிநாடொன்றில் எரிவாயு தயாரிப்பு நிறுவனமொன்றில் பணியாற்றி ஒப்பந்தகாலம் முடிவடைந்து நாடு திரும்பியுள்ள நண்பன் செந்தூரனையும் இணைத்துக்கொண்டு இவ்வணிகத்தை ஆரம்பித்தார். கார்த்திகேயன் தனது சொந்த சேமிப்பிலிருந்த ரூபா 400,000 இனையும் செந்தூரனது பங்களிப்பாக ரூபா. 1,000,000 இனையும் மூலதனமாகக் கொண்டு தந்தையின் மாட்டுப்பண்ணைக்கு அருகிலுள்ள தனது ரூபா 600,000 பெறுமதியான கட்டடத்தில் **பிறைற் எரிவாயு** என்னும் பெயரில் உற்பத்தியை தொடங்கினர். வணிகத்தினை மேலும் விரிவுபடுத்துவதற்காக ரூபா 1,500,000 வங்கிக்கடனைப் பெறுவதற்காக வணிகத்திட்டத்தினைத் தயாரித்து இலங்கை வங்கியில் சமர்ப்பித்து வருடாந்தம் 24% வட்டிக்குக் கடனைப் பெற்றுக்கொண்டனர்.

இச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. உயிர் வாயு வணிகத்தை ஆரம்பித்தல் தொடர்பில் கார்த்திகேயனிடம் காணப்பட்டமுயற்சியாண்மைப் பண்புகள் இரண்டு தருக.
2. **பிறைற் எரிவாயு** வணிகத்தில் காணப்பட்ட பலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. கார்த்திகேயனுக்கு இவ்வணிக எண்ணம் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் இரண்டு தருக.
4. **பிறைற் எரிவாயு** வணிகம் உரிமை அடிப்படையில் எவ்வகை வணிக அமைப்பாகும்?
5. **பிறைற் எரிவாயு** வணிகத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள முயற்சியாண்மையின் முகாமையாளர் வகிபங்கிற்கான உதாரணம் ஒன்று தருக.

***பிறைற் எரிவாயு*** *வணிகம் தொடர்பில் மதிப்பிடப்பட்ட தகவல்கள் வருமாறு*

| | |
|---|---|
| இடத்தை தயார்ப்படுத்தல் | ரூபா 30,000 |
| பதிவு செய்தல் செலவு | ரூபா 10,000 |
| வணிகத்திட்டம் தயாரிப்பதற்கான செலவு | ரூபா 5,000 |
| உபகரணங்கள் கொள்வனவு | ரூபா 300,000 |
| சிலின்டர்கள் கொள்வனவு | ரூபா 400,000 |

*ஒரு மாதத்திற்கான வருமானங்கள் செலவினங்கள் வருமாறு*

| | |
|---|---|
| விற்பனை வருமானம் | ரூபா 700,000 |
| கொள்வனவு | ரூபா 300,000 |
| விளம்பரச் செலவு | ரூபா 10,000 |
| மின்சாரக் கட்டணம் | ரூபா 12,000 |
| கட்டட பெறுமானத் தேய்வு | ரூபா 5,000 |
| உபகரணங்கள் பெறுமானத் தேய்வு | ரூபா 6,000 |
| சிலிண்டர் பெறுமானத் தேய்வு | ரூபா 10,000 |

6. நிலையான சொத்துக்களின் பெறுமதியினை கணிப்பிட்டுக் காட்டுக.
7. வணிகத்தை ஆரம்பிக்க முன்னரான செலவுகளை கணிப்பிட்டுக் காட்டுக.
8. ஒரு மாதத்திற்கான மொத்த வருமானம் எவ்வளவு?
9. ஒரு மாதத்திற்கான மொத்தச் செலவினம் எவ்வளவு?
10. ஒரு மாதத்திற்கான தேறிய இலாபத்தினைக் கணிப்பிடுக.

**(2X10=20 புள்ளிகள்)**

**2.**

1. முயற்சியாளரிடம் பொதுவாகக் காணப்படும் பண்புகள் நான்கு தருக.
2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானவையா அல்லது பொய்யானவையா என எழுதுக.

   அ. உற்பத்திக்கான வளங்களில் மிக முக்கியமான வளமாக இருப்பது முயற்சியாண்மையாகும்

   ஆ. முயற்சியாண்மையானது நபர்களினுள் அண்மைக்காலத்திலிருந்தே விருத்தியடைந்துள்ளது.
3. முயற்சியாளர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையிலான ஒற்றுமைகள் நான்கு தருக.
4. முயற்சியாண்மையின் மூலம் முயற்சியாளருக்கு கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக
5. சிற்றளவு வணிகத்தின் பண்புகள் நான்கு தருக.

(2X5=10 புள்ளிகள்)

3.

1. முயற்சியாளர் விருத்திசெய்துகொள்ள வேண்டிய அடிப்படைத் திறன்கள் நான்கு தருக.

2. கமல் வணிகச் சூழலிலுள்ள உண்மையான மாற்றங்களை அறிந்துகொள்ள விரும்புகின்றான். இதனால் கமலுக்கு கிடைக்கக்கூடிய பயன்கள் நான்கு தருக.

3. ஆகச்சூழலில் உள்ளடங்கும் காரணிகள் நான்கு தருக.

4. பின்வருவன ஒவ்வொன்றும் எந்த புறச்சூழல் காரணிகளுள் அடங்கும் என்பதனை எழுதுக.

    அ. இலங்கையில் பால்மாவின் விலையேற்றம்

    ஆ. மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதனை அரசாங்கம் கட்டுப்படுத்தல்.

5. இலங்கையில் தாராளமாகக் காணப்படும் பௌதிக வளங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

(2X5=10 புள்ளிகள்)

4.

1. வணிகத்திற்குப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்யும்போது கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் நான்கு தருக.

2. சிறந்த வணிக எண்ணமொன்றின் பண்புகள் நான்கு தருக.

3. பொருத்தமான வணிக வாய்ப்பொன்றைத் தெரிவு செய்வதற்கான மூன்று படிமுறைகளும் எவை?

4. புதிதாக வணிகம் ஒன்றினை ஆரம்பிப்பவர் வணிகத்திட்டத்தினைத் தயாரிக்க வேண்டியதன் நோக்கங்கள் நான்கு தருக.

5. சந்தைப்படுத்தல் கலவையின் பிரதான மாறிகள் (4 Ps) நான்கும் எவை?

(2X5=10 புள்ளிகள்)

5.

1. உற்பத்திச் செயன்முறையினை பாச்சற் கோட்டுப் படத்தில் காட்டுக.

2. நிர்வாகத்திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்ற விடயங்கள் நான்கு தருக.

3. எந்தவொரு வணிக அமைப்பிலும் அவதானிக்கக் கூடிய பொதுவான பண்புகள் நான்கு தருக.

4. பங்குடமை ஒப்பந்தம் ஒன்றில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

5. “கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் சட்ட ஆளுமை உள்ள அமைப்பாகும்.” இங்கு சட்ட ஆளுமை என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(2X5=10 புள்ளிகள்)

6.

1. இலங்கையில் முயற்சியாண்மைக் கலாசாரமொன்னு உருவாகுவதற்கான தேவைப்பாடுகள் இரண்டு தருக.
2. பெண் முயற்சியாண்மைக்கான தடைகள் நான்கு தருக.
3. வணிகமொன்றின் பொதுநல விருப்புடைய பொறுப்பிற்கு உதாரணம் இரண்டு தருக.
4. இலங்கையில் முயற்சியாளருக்கு நிதிசாரா ஊக்குவிப்பினை வழங்கும் நிறுவனம் ஒன்றினைக் குறிப்பிட்டு அந்நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற நிதிசாரா ஊக்குவிப்புக்களுக்கு இரு உதாரணங்கள் தருக.
5. முயற்சியாளராவதற்குப் பெண்களிடம் காணப்படுகின்ற பலங்கள் நான்கு தருக.

(2X5=10 புள்ளிகள்)

7. நரேஸ் புத்தகசாலை ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டார். அவரது வணிகத் திட்டத்திலிருந்து பெறப்பட்ட முதல் மாதத்திற்கான காசு உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல்களை உள்ளடக்கிய தகவல்கள் வருமாறு

| விபரம் | தொகை (ரூபா) |
|---|---|
| நரேஸ் கொண்டுவந்த காசு | 1,000,000 |
| வணிகத்திட்டம் தயாரித்தல் செலவு | 12,000 |
| பதிவுக் கட்டணம் | 7,000 |
| வங்கிக்கடன் பெற்றது | 800,000 |
| தளபாடங்கள் கொள்வனவு | 300,000 |
| கட்டட வாடகை செலுத்தியது | 30,000 |
| மின்கட்டணம் செலுத்தியது | 10,000 |
| விற்பனை வருமானம் பெற்றது | 650,000 |
| புத்தகக் கொள்வனவு | 350,000 |
| ஊழியர் சம்பளம் | 20,000 |
| கடன்பட்டோரிடம் பெற்ற காசு | 50,000 |
| கடன் கொடுத்தோருக்குக் கொடுத்த காசு | 70,000 |
| வங்கிக்கடன் மீளச் செலுத்தியது | 40,000 |
| வங்கிக்கடன் வட்டி செலுத்தியது | 8,000 |

நரேஸ் புத்தகசாலையின் முதல் மதத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிப்பதன் மூலம் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1. மொத்த காசு உட்பாய்ச்சல் (3 புள்ளிகள்)
2. மொத்த காசு வெளிப்பாய்ச்சல் (5 புள்ளிகள்)
3. மாத இறுதிக் காசு மீதி (2 புள்ளிகள்)